விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆனி 8 ஷவ்வா 3 இதழ் 132
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 22-6-1985


## ரஜீவுக்கு கொடுத்த வாக்குறுதியை ஜே. ஆர். காப்பாற்றமுடியுமா?

### 'இந்து' பத்திரிகை கருத்து

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்திக்கு இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவாரா? என்பதுகுறித்து ராஜதந்திரிகள் மட்டத்தில் பெரும் சந்தேகம் எழுந்துள்ளது என்று 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு பிராந்திய சுயாட்சி வழங்கப்படுமாயின், அது எதிர்காலத்தில் தனிநாடு ஒன்றை அமைப்பதற்கு வழியேற்பட்டுவிடும் என்று ஜே. ஆருக்குப் பலர் ஆலோசனை கூறிவருவதோடு அச்சமும் தெரிவித்துவருகின்றனர்.

இலங்கையில் ஆயுதப்படையினரின் நடவடிக்கைகளை நோக்குமிடத்து அவர்கள் ஜனாதிபதி ஜே. ஆரின் கட்டுப்பாட்டை மீறிய நிலையிலேயே காணப்படுகின்றார்கள். தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள புதிய நல்ல சூழ்நிலைகள் மாறுவதற்கு முன்

(8ம் பக்கம் பார்க்க)

★ ★ யுத்த நிறுத்தம் செய்துள்ள

# தமிழீழ போராளிகளுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும்

### பழைய விலையில் பெற்றோல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள ஒருவரின் எரிபொரு

(8-ம் பக்கம் பார்க்க)

## சபையில் 'சரத்' பேச்சு

(பெஞ்சமின் இராஜரத்தினம்)

இலங்கையின் இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு தற்போது யுத்த நிறுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் தமிழ் போராளிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்த வேண்டும் என்று கலவானத் தொகுதி உறுப்பினர் திரு. சரத்முத்தெட்டுவேகம நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகால நிலை நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், ''யுத்த நிறுத்தத்தை நாம் அன்றே வரவேற்றோம். இன்றும் வரவேற்கிறோம். இனப் பிரச்னைக்கு அரசாங்கம் தீர்வுகாண முற்படும்போது பலவித சிரமங்கள் ஏற்படும். இதனை அரசு சமாளித்தே ஆகவேண்டும் என்றார்.

''வடபகுதியில் 2 லட்சத்து 50 ஆயிரம் சிங்கள மக்களைக் குடியேற்றுவதாக கூறினீர்கள். ஆனால் அங்கே யார் செல்வது. கொலன்னவ தொகுதியில் இருந்து பலர் வடபகுதிக்குச் சென்று குடியேற விரும்பியுள்ளார்களாம். ஏனெனில் அங்குதான் 'அங்கொடை' உள்ளது. அப்படிப்பட்டவர்கள் அங்கு போவார்கள்

எம். பிக்களுக்கு நிறைவேற்று அதிகாரம் வழங்குவதாகவும், நாட்டில் இராணுவச் சட்டத்தை பிறப்பிக்கப்போவதாகவும் அரசு அறிவித்திருந்

(8-ம் பக்கம் பார்க்க)

### இனப் பிரச்னை தொடர்பாக—

## பேச்சு நடத்துவது பற்றி கூட்டணிக்கு அரசு அறிவிப்பு

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வு காண்பதற்காக மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த இலங்கை அரசு ஏற்பாடு செய்துள்ளது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கூட்டணி வட்டாரங்

(8-ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் சுதந்திர கட்சியினர் வெளிநடப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் வெளிநடப்பு செய்தனர். இவர்களை தொடர்ந்து மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தினேஸ் குணவர்த்தனவும் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தார்.

அவசரகால நிலையை நீடிக்கும் விவாதத்தில் தமது கட்சியினருக்கு ஒதுக்கப்பட்ட நேரம் போதாது என்றும் மேலதிக நேரம் ஒதுக்க வேண்டும் என்றும் விவாதத்தை நீடிக்க வேண்டுமென்றும்

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழர்களை கொல்வதனை அரசு நிறுத்தவேண்டும்

### அமிர் கூறுகிறார்

(சென்னை)

இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத்தை அடக்குவதாகக் கூறிக்கொண்டு அப்பாவி தமிழ்மக்களைக் கொன்று வருவதினை நிறுத்தவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்

அண்மையில் புதுடில்லியில்

(8ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் ஊரடங்கு தளர்வு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி. முல்லைத்தீவு. மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது. இத்தகவலை தேசிய பந்தோ

(8ம் பக்கம் பார்க்க)

## ரஜீவ்-சிறிமா பேச்சு

(சென்னை)

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா இம்மாத இறுதியில் சந்திக்கவிருப்பதாகத் தெரிய வருகிறது.

மருத்துவ சிகிச்சைக்காகத் தற்போது யூகோஸ்லாவாக்கியாவில் தங்கியுள்ள திருமதி பண்டாரநாயகா கொழும்பு திரும்புமுன் புதுடில்லியில் சில தினங்கள் தங்கி திரு. ரஜீவ்வைச் சந்திக்கவிருப்பதாகக் கூறப்படுகிறது. (து)

### காரைநகரில் சத்தங்கள்....

[யாழ்ப்பாணம்]

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்றுமுன் தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், பீரங்கிவேட்டுச் சத்தங்களும் கேட்டன

தாக்குதல் ஒன்று நடைபெறுவது போன்று கேட்ட இச்சத்தங்களினால் அப்பகுதி மக்கள் பதற்றமடைந்து இடம்பெயர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## "ரஜீவ்—ஜே. ஆர். பேச்சு ஏமாற்றம் தந்துள்ளது"

### 'ஜனதா' தலைவர் கூறுகிறார்

[கோயம் புத்தூர்]

இலங்கை பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்குமிடையில் அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தை பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது என்று கோயம்புத்தூர் மாவட்ட ஜனதா கட்சித் தலைவர் திரு யூ. கே. பி. நடராஜன் குறிப்பிட்டுள்ளார்.

கோயம்புத்தூரில் நடைபெற்ற ஜனதா கட்சிக் கூட்டத்தில் அவர் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

## கடலில் இருந்து மூன்று மைலுக்குள் மீன்பிடிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தின் கடல் பகுதியிலிருந்து 3 மைல்களுக்குள் சென்று மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கலாம்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் காரைநகர், கொழும்பு இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதன் பேரில் இந்த அனுமதி கிடைத்துள்ளது

அதிகாலை 4 மணியிலிருந்து இரவு எட்டு மணி வரை மீன

(8-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு—காங்கேசன்துறை யாழ்தேவி ரயில்சேவை இன்றுமுதல் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

கொழும்புக்கும் காங்கேசன்துறைக்குமிடையேயான யாழ்தேவி ரயில் சேவை இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட ஓமந்தைப்பாலம் நேற்று நண்பகலுடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 7-05க்கு கொழும்பிலிருந்து புறப்படும் யாழ்தேவி பிற்பகல் 3-08க்கு காங்கேசன்துறையை வந்து சேரும் என்றும் அந்த ரயில் இரவு அங்கு தரித்து நின்று நாளை ஞாயிறு காலை 6-25க்குப் புறப்பட்டு 6-50க்கு யாழ். புகையிரதநிலையத்துக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## தெ. ப. பொ. உ. வி. சங்கத்தில் கொள்ளை

(கொழும்புத்துறை)

கோப்பாய் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் துப்பாக்கி, கைக்குண்டு சகிதம்

[8-ம் பக்கம் பார்க்க]

## எச். டபிள்யூ. ஜெயவர்த்தனமூலம் ரஜீவ் ஜே. ஆருக்கு விசேட செய்திகள் அனுப்பினார்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி, தம்மைச் சந்தித்த இலங்கையின் விசேட தூதுவர் சட்டத்தரணி எச். டபிள்யூ ஜெயவர்த்தனவிடம் இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு சமர்பிக்குமாறு விசேட செய்திகள் அடங்கிய கடிதமொன்றை கொடுத்து அனுப்பியுள்ளார்.

யுத்த நிறுத்தம் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையில் இலங்கைப் பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்களிடையே மீண்டும் கருத்து வேற்றுமை ஏற்படுவதற்கு முன்னர் உடனடியாக பேச்சு நடத்தி இப்பிரச்னைக்கு உடனடித் தீர்வு காண வேண்டும் என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

# விளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ ரூ. 250/- பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 3877

சாவகச்சேரி பஸ்நிலையத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் சாவகச்சேரி - கச்சாய் பிரதான பஸ் பாதையில் நன்கு காய்க்கும் 36 பரப்பு காணி எல்லை கொண்ட தென்னம் தோட்டம் விற்பனைக்குண்டு. மேற்குறிப்பிட்ட தென்னந்தோட்டத்துடன் அடுத்து நான்கு அறைகளைக் கொண்ட மின்சாரம், மோட்டர் தண்ணீர் ஆகிய வசதிகள் கொண்ட வீடும் வீடு அமைந்துள்ள 24 பரப்புக்கொண்ட தென்னை, பலா, மாமரங்களைக் கொண்ட காணியும். நல்ல தண்ணீர்உள்ள இரண்டு கிணறுகளும் உண்டு. கோழிப் பண்ணை, மாட்டுப்பண்ணை ஆகியவற்றுக்கும் மிகவும் உகந்தது. நீண்டகால்லக் குத்தகை அடிப்படையில் கொடுக்கப்படும். விபரங்களுக்கு: திரு. ஆர். இராஜேந்திரன், பொதுமுகாமையாளர், வட பிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில்; அல்லது 1ம் கட்டையடி, கச்சாய் வீதி, சாவகச்சேரி. 3903

NV. 300 Head விற்பனைக்கு உண்டு நல்லூர் வீடியோ சென்ரர், முத்திரைச்சந்தை, நல்லூர். 3954

எழுதுமட்டுவாள் புகையிரத நிலையத்துக்கு அருகில் ஐம்பது (50) பரப்பு தென்னந்தோட்டக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. மலிவாகப்பெறலாம். உடன்கடிதத்தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல. 3921 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3921

நல்ல நிலையிலுள்ள உருத்திர வீணை விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: வீடியோ பிரசாத், நம் 49, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். 3962

நல்ல நிலையிலுள்ள பாவித்த வீட்டுத் தளபாடங்கள், மற்றும் பாவனைப் பொருட்கள் அனைத்தும் 22-6-85 சனிக்கிழமை காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும். இடம்: 67, ஸ்ரேஷன் ரோட், வீரகேசரி காரியாலயத்திற்கு அருகாமையில் மேலும் விபரங்களுக்கு: S ஜெயராஜா, 117, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். 3961

மினி தியேட்டருக்குத் தேவையான 5X5 திரையுடன்கூடிய லென்ஸ் மற்றும் சகல உபகரணங்களும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: S M சிவமூர்த்தி, கலா வீடியோ சென்ரர், கந்தசாமி கோவிலடி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. 3967

BROILERS இறைச்சிக் கோழிகளை எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைசந்தையடி, நல்லூர். 3953

நல்ல நிலையிலுள்ள C-90 நீல நிறமுள்ள HONDA மோட்டார் சைக்கிளும், 34ஸ்ரீ டிலிக்கா Van ஒன்றும் உடன் விற்பனைக்குண்டு சனி, ஞாயிறு நாட்களில் பார்வையிடலாம். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: S கனகலிங்கம், No 6, அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 3906

## விற்பனைக்கு

திண்டுக்கல் 2 அடி இரும்புப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி க. இராஜேஸ்வரி, பார் மணியம் வீதி, தெல்லிப்பழை. 3908

புதிய, பழைய அலுமாரிகள், கடைக் கதவுகள், வீட்டுக் கதவுகள், சோக்கேஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு: மணியம், 21/2, அம்மன்ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 3949

## தேவை

எமது கொழும்பு கிளை ஸ்தாபனத்துக்கு உதவி முகாமையாளர், உதவியாளர், தேவை ஆங்கிலம், கணக்கியல் அறிவு அவசியம். தங்குமிடவசதி அளிக்கப்படும் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு எஸ் சுப்பிரமணியம் அன்ட் கொம்பனி 53 K. K. S. வீதி, யாழ்ப்பாணம். 3927

நல்ல நிலையிலுள்ள மொரிஸ் மைனர், வோக்ஸ் வகன், அல்லது மொரிஸ் ஒக்ஸ்போர்ட் கார் தேவை. தயவு செய்து விலை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் யாழ். சைனீஸ் றெஸ்ற்ரோரன்ற், 124, R R. நல்லையா வீதி, யாழ்ப்பாணம். 3942

ரோனியோ, தட்டச்சு இயந்திரங்கள் பழுது பார்க்கக்கூடியவர்களும், கார் மெக்கானிசம் தெரிந்தவர்களும். தங்களது சகல விபரங்களையும் எழுத்து மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்: S P. S. இளங்கோ, 60/2, யாழ் இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 3910

அரிசி மில் இயந்திரம், இஸ்டீம் போயிலர், றய்யர் மேற்குறிப்பிட்ட இயந்திரங்கள் உடன் தேவை. 25-6 85க்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 3966, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3966

Air Compressor குறைந்தது 100 P. S. I. அமுக்கமும் 200 C F. M. காற்றை வெளித்தள்ளவும்கூடிய பெரிய அளவிலான எயர் கொம்பிறசர் ஒன்று உடனடியாகத் தேவைப்படுகிறது. மாரியம்மன் மோட்டர்ஸ், கோப்பாய் தெற்கு, கோப்பாய். 3956

## தவறிவிட்டது

இல 532723205 V தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். V. றவீந்திரராஜா, 134 கச்சேரி-நல்லூர் வீதி, நல்லூர். 3964

## FOR SALE

National 3 door Refrigerator, National 2 brush floor Polisher, Indesit 4 plate electric cooker with oven Cabinet, Iron safe, Teak Vono spring beds National Panasonic Music centre and Battery operated road racing set. — Mrs Rasanayagam, 14/1, 1st Lane (Right), Potpathy Road, Kokuvil. 3923

## நாளை குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் வரும் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் பண்டாரக்குளமருதவளவு ஸ்ரீவிநாயகர் ஆலயத்தில் வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை விழா கொண்டாடவுள்ளனர்.

## குத்தகைக்கு

கோப்பாய் தெற்கிறை கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியில் பருத்தியடைப்பு என்னும் சுவர் வைத்தபுலம் பரப்பு இருபது 1986-ம் வருடம் ஆடி மாதம் தொடக்கம் ஐந்து வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்படும். தொடர்பு: சி சிவக்கொழுந்து. தத்துவகாரன், முக்குறுணிப் பிள்ளையார் கோவில் வீதி, கல்வியங்காடு. (3915)

## காணவில்லை

கோவில் நாகு (J. C) பசுக்கன்று மண்ணிறம் (வெண்மை கலந்தது) உயரம்: 3 அடி 15-6-85 சனிக்கிழமை தொடக்கம் காணவில்லை. கண்டு பிடித்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அறிவிக்கவும். எஸ். ஆறுமுகம் (சிவம்), 53, ஆடியபாதம் வீதி' திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (கல்வியங்காடு சந்தைக்கு அருகாமையில்) 3955

சென்ற 10-6-85 லிருந்து சி. ஆறுமுகம், வயது 35 என்பவரை காணவில்லை இவர் ஒரு மனநோயாளி இவரைப் பற்றிய தகவல் ஏதும் தெரிந்தால் கருணை கூர்ந்து கீழ்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளும் படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். தொடர்பு, சி கந்தசாமி, ஊரி, களபூமி, காரைநகர். 3947

## வகுப்புகள்

தமிழ் / ஆங்கில சுருக்கெழுதது, தட்டெழுத்து, ஆங்கிலப் பேச்சும் இலக்கணமும், கணக்கியல்- எல்லாப் பரீட்சைகளுக்கும் - தேர்ச்சி பெற்ற பயிற்றப்பட்ட, அனுபவமுள்ளவர்களால் தனிப்பட்ட கவனிப்பு. S T. C A தொழிற் கல்வி நிலையம் [1977 ல் நிறுவப்பட்டது. இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது லண்டன் பிற்மன் பரீட்சைகள் நடைபெறும் உள்ளூர் நிலையம் All Courses are directed by a qualified and experienced Cost and Management Accountant cum Stenographer] 37 (149) சிவன் பண்ணை வீதி (யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி, "ஈழநாடு" பத்திரிகை நிறுவனம் ஆகியவற்றிற்குஅண்மையில்), யாழ்ப்பாணம். 3930

## வலி-கிழக்கு தெ. ப. ப. நோ. கூ. சங்கம் அறிவித்தல்

வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 7500 வரையிலான வெற்றுக் சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/- உம், கேள்விப் பத்திரம் ஒன்று 1/- ம் செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேளவிப் பத்திரங்கள் 29-06-85ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்
நீர்வேலி
1985-06-20.

3968

## 45-ம் நாள் நினைவு அஞ்சலி

வல்லிபுரம் முருகையா (குரு)



ஆண்டவன் படைப்பு: 10-06-1964

ஆள்பவன் பறிப்பு: 09-05-1985

திதி: 22-06-1985

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாய்த் துயரில் நீந்தி, திடீரென மறைந்து விட்ட எங்கள் அன்புச் செல்வம் குரு! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உன் திரு உருவம் எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது! உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்

தந்தை, தாய், சகோதரர்கள், சகோதரிகள், பேரன், பேத்தி, மாமா, மாமி, அத்தான்மார், அண்ணிமார், சித்தப்பாமார், சித்திமார், பெருமக்கள், மருமக்கள், உற்றுர், உறவினர், நண்பர்கள்.

சமரபாகு,
கரும்பியோடை,
வல்வெட்டித்துறை.

தகவல்:
வல்லிபுரம் குடும்பத்தினர்.

(3952)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



சுப்பிரமணியம் நேசதுரை

(சுழிபுரம்)

தோற்றம்: 6-4-1952 மறைவு: 9-5-1985

எங்கள் அன்புத் தெய்வமே!

நீங்கள் எங்களைப் பிரிந்து இன்று 45 நாள் ஆகிறது. உங்கள் பிரிவால் நாங்கள் துன்பக் கடலில் தத்தளிக்கின்றோம் எங்கள் துன்பம் என்றும் நீங்காது. உங்கள் ஆன்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்!

மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள், உறவினர்.

மூளாய் தெற்கு, சுளிபுரம். (3951)

## நினைவஞ்சலி





இ. இராஜயோகி — ச. தர்சிகா

அன்பின் திருவுருவாய், எல்லோரிக்கும் இனியவர்களாய் வாழ்ந்து, சடுதியாய் மறைந்த மகளே, சகோதரி, மைத்துனியே; பேத்தி, மருமகளே, பெருமகளே உங்கள் நினைவு எங்களை விட்டகலாது.

இருவரின் துக்க தினத்தில் கலந்து கொண்டும், வேறு பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும், கனடாவில் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

தாய், பேத்திமார், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், மாமன்மார், மாமிமார்,

'அமிர்த வாசம்'
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். 3950

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# அமெரிக்கா கேட்டுக்கொண்டால்

# ஷியா முஸ்லிம்களை விடுவிக்கத் தயார்

## இஸ்ரேல் அறிவிப்பு

**வாஷிங்டன், ஜூன் 21**

**அமெரிக்கா கேட்டுக் கொள்ளும் பட்சத்தில் பிடித்துவைத்திருக்கும் 700 ஷியா முஸ்லிம்களையும் விடுதலைசெய்யத் தாம் தயாராகவிருப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.**

லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் ஷியா மற்றும் அமால் முஸ்லிம் தீவிரவாதிகளினால் பணயம் வைக்கப்பட்டிருக்கும் 40 அமெரிக்கர்களையும்விடுதலை செய்வற்கு, இஸ்ரேல் பிடித்து வைத்திருக்கும் 700 ஷியா முஸ்லிம்களை விடுதலைசெய்யுமாறு பணயம் வைத்திருப்பவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த பணயக்கைதிகள் விவகாரம் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களை அமெரிக்க ஜனாதிபதி றீகன் இன்று சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இந்த நேரத்தில் மேற்படி கோரிக்கை தொடர்பாக இஸ்ரேல் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது. இஸ்ரேலின் கருத்து பணயக்கைதிகள் விவகாரத்தில் புதிய மாற்றம்எனக் கருதப்படுகிறது.

ஆயினும் பணயக்காரர்களின் கோரிக்கையை தாம் ஏற்கமுடியாது என்றும் அவர்களுக்கு அடிபணியப்போவதில்லையென்றும் அமெரிக்க உபஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார்

இதேவேளை அமெரிக்கா விரும்பும்பட்சத்தில் பணயக்கைதிகள் விவகாரத்தை தீர்த்துவைப்பதற்கு தாம் உதவிசெய்ய முடியுமென்று சுவிற்சலாந்து அறிவித்துள்ளது.

தற்போது பெய்ரூட்டில் வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க பணயக்கைதிகள் பிரிவு பிரிவாக வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை கடத்தல்காரர்கள் நேற்று நிருபர்களுக்கு காட்டினர்.

இந்த 40 பணயக்கைதிகளில் யூதப்பெயர்களைக் கொண்ட 10 பேர் பிரிக்கப்பட்டு தனியான ஒரு இடத்தில் வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

தம்மை விடுதலைசெய்வதற்கு இராணுவ நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவேண்டாம் என்று பணயக்கைதிகள் அமெரிக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்காபணயக்கைதிகள் விவகாரத்தில் காலதாமதம் காட்டினால் ஆயுதம் ஏந்திய மனிதர்களுடன்தான் எதிர்காலத்தில் அமெரிக்கா பேசவேண்டிவரும் என்று அமால் முஸ்லிம் இயக்கம் அறிவித்துள்ளது.

அமெரிக்க பணயக்கைதிகளுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாது என்று ஷியா முஸ்லிம் தலைவர் நபிபேரி தெரிவித்துள்ளார்.

## திருமலையில் ஊரடங்கு நீக்கம்

(திருகோணமலை)

திருகோணமலைப் பகுதியில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று 20-ம் திகதி தொடக்கம் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டத்தை நீக்குவது குறித்து பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருவதாகத் தெரிய வருகிறது

யாழ் மாவட்டத்தில் இப்பொழுது இரவு 7 மணி தொடக்கம் அதிகாலை 4 மணி வரை ஊரடங்குச்சட்டம் அமுலில் இருப்பது தெரிந்ததே. [மா]

## மீன்பிடிப் படகு மறைவு

(மட்டக்களப்பு)

அட்டாளைச்சேனைக் கடற் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற 22 இயந்திரப் படகுகளில் ஒரு படகு காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன படகில் மஹ்ரூன் [18 வயது], நாகிர் [24 வயது], நியாஸ் [22 வயது] ஆகியோர் மீன்பிடிக்கச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 18 ம் திகதி மாலை 4 மணிக்கு 22 படகுகள் மீன்பிடிக்கச் சென்றதாகவும் அடுத்தநாள் காலை 6 மணிக்கு 2 படகுகள் திரும்பாததாகவும் இதுவரை தேடுதல் நடாத்தியும் அப்படகு கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (மா)

## யாழ். வாவியை நன்னீர் தேக்கமாக்கத் திட்டம்

(கொழும்பு)

யாழ்ப்பாண வாவியை நன்னீர் நிலையாக மாற்றியமைக்கும் திட்டத்தை செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல வருடங்களுக்கு முன் இத்திட்டம்பற்றி யோசனை தெரிவிக்கப்பட்டு 1980-ம் ஆண்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபோதும் தீவிரவாத செயல்களினால் இப்பணி இடைநிறுத்தப்பட்டதாகவும், முப்பது சதுர மைல் பரப்பினையுடைய இந்த வாவி நீர் நன்னீராக மாற்றியமைக்கப்படுவதின்மூலம் யாழ். மக்கள் பெரும் நன்மையை அடையக்கூடிய நிலை ஏற்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

1980-ம் ஆண்டில் இத்திட்டத்திற்கென 2 கோடியே 15 லட்சம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டதாகவும். தற்பொழுது அந்த மதிப்பீடு சற்றுக் கூடுதலாக மாற்றமடையலாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [ரா]

# ரஜீவின் வெளிநாட்டுவிஜயம்

## இந்தியாவின் பெருமையை உயர்த்தியது

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூறுகிறது

(புதுடில்லி)

இந்திய பிரதமர் திரு. ரஜீவ் காந்தி அண்மையில் மேற்கொண்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தினால் உலகநாடுகளில் இந்தியாவின் பெருமை உயர்ந்துள்ளது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

புதுடில்லியில் நடைபெற்ற இக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தின் பின் கட்சியின் பொதுச்செயலாளர் திரு ஸி. இராஜேஸ்வரா வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப்பிரச்னையில்பிரதமர் ரஜீவ்காந்தியின் சமரச போக்கினை அகாலிதள் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அவர் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## லெபனானில் குண்டுவெடிப்பு: 60 பேர் பலி! 100 பேர் படுகாயம்!!

(லண்டன்)

லெபனானின் வடக்கு துறைமுக நகரான திரிபோலியில் நடந்த கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் நேற்று 60 பேர் பலியானார்கள். 100 பேர் காயமடைந்தனர்.

வாடிக்கையாளர் தங்கியிருக்கும் 4 மாடிக் கட்டம் ஒன்றும், இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது தரைமட்டமானது. அருகில் நின்ற வாகனங்களும் சேதமடைந்தன. (க)

# நேபாளத்தில்குண்டுவெடிப்பு 7 பேர் மாண்டனர்

(காத்மண்டு)

நேபாளத்தின்தலைநகர் காத்மண்டு உட்பட ஐந்து இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவத்தில் 7 பேர் பலியாகியுள்ளனர், சுமார் 20 பேர்வரையில் படுகாயமடைந்துள்ளனர்.

அரசாங்கத்துக்கு எதிராகச் செயல்படும் தீவிரவாதிகளே இந்தக் குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து நாடு முழுவதிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

## "தென்னாபிரிக்கா மீது பொருளாதார தடைகளை விதிக்க நேரிடும்"

### பந்தோபஸ்துசபை எச்சரிக்கை

[லண்டன்]

நமிபியாவின் சுதந்திரத்திற்கு தொடர்ந்து தடையாக இருந்தால் தென்னாபிரிக்கா மீது கட்டாய தடைகளை விதிக்க நேரிடும் என்று ஐ. நா. பந்தோபஸ்து சபை எச்சரித்துள்ளது

தென்னாபிரிக்காமீது தற்காலிகநடவடிக்கையாக தாங்களாகவே தடைகளை விதிக்குமாறு எல்லா நாடுகளையும் தீர்மானமொன்றில் அந்தசபை வற்புறுத்தியுள்ளது.

புதிய முதலீடுகளை நிறுத்துவது, கப்பல், மற்றும் விமானப் போக்குவரத்துக்களை பரிசீலனைசெய்வது,தென் ஆபிரிக்காவிற்காகத் தயாரிக்கப்படும் நாணயங்களின் விற்பனையை தடைசெய்வது, விளையாட்டு கலாசார நிகழ்ச்சிகளை பகிஷ்கரிப்பது ஆகியன இவற்றில் அடங்கும். (க)

## கிளிநொச்சியில் வழங்குமாறு கோரிக்கை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மக்கள் வங்கியில் அடைவுவைத்த நகைகளை கிளிநொச்சி அல்லது ஆனையிறவு இராணுவ முகாமில் வைத்து வழங்குமாறும் கொழும்பில்வைத்து பெறுவதில் பல சிரமங்கள் உண்டெனவும் கிளிநொச்சி நகை அடைவு வைப்போர் பாதுகாப்புச் சங்கத்தினர் மக்கள் வங்கி மேலிடத்திற்கும். சம்பந்தப்பட்ட அமைச்சிற்கும் அமைச்சர் எஸ். தொண்டமானுக்கும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துதுளனர்.

## இரத்தினபுரியில் மீண்டும் வெள்ளப்பெருக்கு 700 குடும்பங்கள் பாதிப்பு

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில் மீண்டும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் சுமார் 700 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாகப் பெய்த பலத்த மழையின் நிமித்தம் இம்மாவட்டத்திலுள்ள ஆறுகள் உடைப்பெடுத்துவிட்டதாகவும் பெரும்பாலானபகுதிகள் முற்றாக நீரில் மூழ்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒருமாத கால இடைவெளிக்குள் ஏற்பட்ட மூன்றாவது வெள்ளப்பெருக்கு இதுவாகும்.

## சுன்னாகத்தில் இரண்டு புதிய மின் மாற்றிகள்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் குறைந்த மின் அழுத்த சக்தியில் மின்சார விநியோகம் இருப்பதால் இப்பகுதி மக்கள் பலத்த கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர்.

முக்கியமாக பாடசாலை மாணவர்களும் இதனால் பெரிதும் பாதிப்படைவதாக சுன்னாகம் பிரஜைகள் குழுத்தலைவர் திரு தி மாணிக்கவாசகர் யாழ். மின்சாரசபை அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பின்போது எடுத்துக் கூறியதன் பயனாக இரண்டு புதிய மின் மாற்றிகள் சுன்னாகத்தில் இணைக்கப்படவுள்ளன.

இந்த மின்மாற்றிகளை அமைப்பதற்கான கட்டிடத்தினை அமைக்கும் பணி இவ்வார இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. மின்சார விநியோகம் சீரானதும் சுன்னாகம் உபஅலுவலகத்தில் மின்சார விநியோகம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு மின்சாரம் வழங்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரண வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரா)

## சங்கத்துக்கு நிதிவழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பனம்பொருள் உற்பத்தியாளர் ஐக்கிய நாணய சங்கத்தின் செயற்பாடுகளையும் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு இச்சங்கத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கும், நிதிஉதவி வழங்குவதற்கும் பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த மாதம் முதல் இக்கிராமத்தில் உள்ள ஐம்பது பெண்களுக்கு கைப்பணிப் பயிற்சி ஒன்றையும் இங்கு நடத்துவதற்கும் இச்சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மணிவாக்கு

பிறரால் நமக்குத் துன்பம் உண்டானபோது அவர்களை நாம் குறைகூறுவதெல்லாம் நமக்குள்ள அழுக்காறே!

— ஆன்மவிசாரம்

## நமது நோக்கு

## பாதிக்கப்பட்ட மாணவர் புனரமைப்பு

எந்தக் கொடிய போரிலும் தோல்வி காணுத பண்பு, அன்பு.

அன்புக்கும் அடைக்கும் தாள் உண்டோ? என்பதும் அதனை வற்புறுத்துகிறது.

வைணவ அன்பர்களில் சிறந்தவர் இராமனுஜர் என்று கருதப்படுகிறது. எளிமை வாழ்வு ஆனால் எண்ணமோ எட்டாத தொலைவு!

தான் அனுபவித்த இன்பம் உலகத்துள்ளார் அனைவருக்கும் கிட்ட வேண்டுமென்று ஆசைப்பட்டார். நாராயண மந்திரத்தால் எளிய மக்கள் உய்ய முடியுமென்ற நம்பிக்கை கொண்டவர் இராமனுஜர். குருவின் கட்டளையை மீறினால் தண்டனை கிடைக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

உலகமே உய்யும்போது தனக்கு மட்டும் தீமை வந்தாலும் குற்றமில்லை என்ற முடிவுக்கு வந்தார் அந்த அன்பர்.

ஊர் வாழ ஒருவன் ஒழிந்தால் ஒன்றும் குற்றமில்லை, ஒருவன் வாழத்தான் ஊர் அழியக்கூடாது. எனவே பதவி பறிபோகிறதே என்று இராமனுஜர் பதைக்கவில்லை.

அன்பு உள்ளம் மலை உச்சியிலே ஏற முடியுமானால் தான் இன்று நாடு உய்ய வழியுண்டு.

போர் நிறுத்தம் உண்மையில் பலமடைவதானால் மக்கள் மனோபாவம் மாற்றமடைய வேண்டும். நாடு வாழ்ந்தால்தான் நாம் வாழலாம் என்ற அடிப்படை உண்மை இக்காலத்தில் பலம்பெருவிட்டால் வேறெக்காலத்திலும் பலமடையாது.

நாட்டின் பாடசாலைகள் அனைத்திலும் இதனை ஒரு பயிற்சியாகப் படிப்பிக்க வேண்டிய பொறுப்பு இன்றைய ஆசிரிய குழாத்துக்கு உண்டு

அரசியல், இன, மத பேதங்கள் என்னவானாலும், இன்று பாடசாலைகளின் செல்வங்கள் பல லட்சம் மாணவர் நாட்டின் வருங்காலத்தின் சிற்பிகள் என்பது பாட நெறியிற் பரவலாகப் புகுத்தப்பட வேண்டும்.

சுமார் ஒன்றரை லட்சம் ஆசிரிய பட்டாளம் நினைத்தால் இவ்வித பயிற்சி ஒரு பெரும் புரட்சியாக மாறும். நாட்டின் இன்றைய புண்களைக் குணப்படுத்துவதோடு ஒரு புது வாழ்வுக்கு அடிகோலும்.

அகதிகள் எவராயினும், போராளிகள் எந்தக் கூட்டத்தினராயினும், அவற்றுள் காணப்படும் மாணவ கூட்டம், புனரமைப்புத் திட்டத்தில் முதல் இடம் பெறவேண்டும்.

முதலிடம் என்பதால் அரசியல் திட்டங்களைக் காத்திருக்கவேண்டும் என்பதல்ல.

யுத்த நிறுத்தம் நிரந்தரமாவதற்கு போரால் தாக்குண்ட மாணவர் அனைவரும் பாடசாலைகளில் தக்க முறையில் அனுமதி பெற வேண்டும்.

பார்த்தால் புலிபோன்ற பிரச்னையாக இது தோன்றும். அன்பு, அனுதாபம் என்ற அடிப்படையில் இந்த மாணவர் பட்டாளத்தை பட்டியல்போட்டு செவ்வனே புரிந்துகொள்ள ஒரு நிபுணர் குழு உடனடியாகச் செயற்படவேண்டும்.

கலவரத்தால், குழப்பத்தால், போரின் உக்கிரத்தால் - ஏன் போருக்கென்று தம்மை அர்ப்பணிக்க முன்வந்த ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் அனைவரும், மாணவ பருவத்தை இழந்தபோதும் அதற்குரிய சலுகைகள் பெற்றுப் பொருத்தமான பாடசாலைகளில் -அரச,தனியார்- தாமதமின்றி அனுமதிக்கப்படவேண்டும்.

படிக்கும் காலம் போய் விட்டதே என்று விரக்தியடைந்தவர்கள் அனைவரும் பேணப்பட்டு இழந்த காலஎல்லைக்குரிய சட்டங்கள் தளர்த்தப்பட்டு கல்வியில் தொடர; பெற்றோர், ஆசிரியர், பிரஜைகள் குழு ஒருமித்து இப்பணியில் இறங்க வேண்டும்.

இதற்குரிய பொதுவான கொள்கைகளையும் கருத்துக்களையும் விசேட சுற்றுநிருபம் மூலம் கல்வியமைச்சு துரிதமாகச் செயற்படுத்த வேண்டும்.

படிப்பை எவ்விதத்திலும் தொடருவதில்லை என்ற முடிவு மனமுறிவால் தாக்குண்ட மாணவருக்கு ஏற்படுவது வியப்பல்ல. ஆனால் அதனைத் தடுப்பதே விவேகமானது.

கல்வி அமைச்சில் கல்விப் புனரமைப்பு என்ற விசேட பிரிவு, அதற்குத் தகைமையுடைய தொண்டர்குழாத்தின் கண்காணிப்பில் விடப்படவேண்டும்.

இவ்வித திட்டங்கள் மிக அற்புதயான முறையில் செயற்படுத்தப்பட்ட வரலாறு இரண்டாவது உலக மகாயுத்தத்தில், படிப்புக் குழம்பிய நாடுகளில் -குறிப்பாக பிரிட்டனில்- இன்றும் கைக்கெட்டும். இவ்வித செயல்முறையைப் பயன்படுத்த வேண்டிய தேவை எமக்கு உண்டு.

கல்வி என்று நாம் குறிப்பிடும்போது கல்லூரிகளில் நடைபெறும் உயர்தரக் கல்வியை பொதுவாகவும், பயிற்சிக் கல்லூரிகளில் தொழில் பயிற்சி வாய்ப்பையும் பல்கலைக்கழகங்களில் விசேட அமைதியையும் குறிப்பிடுகின்றோம்

நாம் முன்னர் குறிப்பிட்டதுபோல் இவ் விடயத்தில் சமூகநலன் என்ற அடிப்படையில் அன்பும், அனுதாபமும் தலைமைதாங்குவதானால் திட்டம் வெற்றி பெறுவது திண்ணம்.

---

(நாளை மணிவாசகர் குருபூசை)

# வாசகர் தந்த வாசகம்

வி. சிவானந்தசர்மா

“திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்” என்பது ஒரு பழம் புலவர் வார்த்தை. மணிவாசகரின் திருவாசகம் என்ற மனத்தை உருக்கி ஆன்மாவையும் உருக்கிப் பரம்பொருளோடு ஒன்ற வைக்கும் ஆற்றல் வாய்ந்தது.

மணியனைய சொற்றொடுத்து மாலையாக்கி வழங்கியமையாலன்றோ மணிவாசகரெனும் பெயரை அவர் பெற்றார்.

“வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால்! நற்கருப் பஞ்சாற்றினிலே தேன் கலந்து சுவைக்கிறது” என்று புளகாங்கிதமடைகிறார் திருவருட் பிரகாசவள்ளலார்.

பாடல்களின் பொருளமைதி சொல்லாட்சி இரண்டாலும், பாடுவர் தம்மையறியாமலே உளமுருகி நிற்கும் தன்மையை உடையது திருவாசகம்.

மதுரபாவம் என்று வடமொழியில் சொல்லப்படும் வகையில் அமைந்தவை இவரது பாடல்கள் சன்மார்க்கம் என்றும் இதனைச் சொல்வர். ஞான நிலை நின்றவர்களுக்கே இந்நிலை புரியும் நாயகன் நாயகி பாவம் என்றும் இதனைக் கூறுவர்.

ஆண்டவனைப் பதியாகவும் தம்மை சதியாகவும் கொண்டு ஒழுகும் நிலையில் வாழ்ந்தவர் மணிவாசகர். சமய குரவர் நால்வரும் நான்கு நெறிகளில் வாழ்ந்து காட்டினார்கள். சம்பந்தன் ஆண்டவனின் புத்திரனாக வாழ்ந்தார். நாவுக்கரசர் ஆண்டவனின் அடிமையாக வாழ்ந்தார். சுந்தரர் ஆண்டவனின் தோழனாக வாழ்ந்தார், மணிவாசகரோ ஆண்டவனின் காதலியாக மனைவியாக வாழ்ந்து காட்டினார்.

ஆண்டவனிடமிருந்து பிரிந்து இப்பூவுலகில் பிறப்பெடுத்து ஆன்மகோடிகள் அனைத்தும் அவனடியில் மீண்டும் சேரத் தவமிருப்பவையே அவன் பாத நிழலில் சேர்ந்து முத்தியின்பம் காண்பவை என்ற சைவ சித்தாந்தப் பேருண்மையை விளக்குவன இவரதுபாடல்கள்.

மேலும், உலக மாந்தரினின்று வேறுபட்டு உயர்நிலையில் நின்று பாடாமல் மக்களோடொட்டிநின்று அவர்களது அன்றாட நடைமுறைகளை மையமாக வைத்து நாட்டார் பாடல் அமைப்பில் அனேக பாடல்களை இவர் யாத்திருக்கறார்.

திருவெம்பாவை இதில் முக்கியமானது மகளிர் நோற்கும் பாவை நோன்பைக் கண்டு அதையே வழிபாடாக்கி-பாடலாக்கி உலகுக்குத் தந்தவர் அவர். அதேபோல், திருச்சாழல், திருக்கோத்தும்பி, திருப்பொற்சுண்ணம் போன்றவையும் இத்தகையனவே.

இன்றும் நமது நாளாந்த வாழ்க்கையில் ஆலயங்களில் நிகழும் பூர்வக் கிரியை முதல் வீடுகளில் நிகழும் அபரக் கிரியை ஈறாக என்றும் கலந்து நலிப்பது மணிவாசகரின் திருவாசகமாகும்.

மணிவாசகரின் தினத்தில் அவர் வாழ்வை நினைத்து, அவர் பாடல்களைப் பாடி இறையருள் பெறுவோமாக.

---

## வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் நயினை ஸ்ரீ நாகபூஷணி

—மூ நா. நடராசா

இலங்கையின் வடபால் அமைந்துள்ள சப்ததீவுகளில் நடுநாயகமாக விளங்குவது நயினாதீவு நாகதீவு, நயினார் தீவு, நாவலந்தீவு, மணித்தீவு, மணிபல்லவம் எனப் பலபெயர்கள் கொண்டு இத்தீவு அழைக்கப்பட்டிருப்பதாகச் சரித்திர விற்பன்னர்கள் கூறுவர். சக்தி பீடங்கள் அறுபத்து நான்கில் புவனேஸ்வரிபீடம் அமைந்திருப்பதும் இங்கேயாம். இப்பிரபஞ்சகதின் இயக்கங்கள் எல்லாவற்றிற்கும் மூலகாரணமான சக்தி, நாகபூஷணி என்னும் திருநாமத்துடன் இங்கு கோயில்கொண்டு எழுந்தருளியிருந்து ஆன்மாக்கள் ஈடேற அருள் பாலிக்கின்றாள்.

இவ்வாலயத்தின் வரலாறு இன்றுவரை எந்தச் சரித்திர ஆசிரியர்களாலும் அறுதியிட்டுக கூறப்படவில்லை. கர்ண பரம்பரையாக வந்த கதைகள் மூலமாகவும்-வரலாற்று ஆராய்ச்சி மூலம் கிடைக்கப்பெற்ற தகவல் வாயிலாகவும் இதன் வரலாறு பிரசித்திபெற்ற பண்டைய நாகர் நாகரிகத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படுகின்றது இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் காட்சிதரும் ஐந்துதலை நாக உருவை ஆராய்ந்த புகழ்பெற்ற சிற்பசாஸ்திர அறிஞர் பண்டிற் எம். நரசிம்மன் அவர்கள்; அது பல ஆயிரம் வருடங்கள் பழமைவாய்ந்தது எனக் கூறியுளளார் பூர்வீகத்தில் இங்கே நாக வழிபாடே நடைபெற்றிருக்க வேண்டுமென்றும், நாகர் நாகரிகம் மருவிவரும் காலையில் நாக வழிபாடும் அருகி, அந்த நாக உருவின்கீழ் அம்பிகையின் உரு பிரதிஷ்டைசெய்யப்பட்டிருக்கலாம் எனவும் நம்ப இடமுண்டு.

இந்திரன், அர்ச்சுணன், ஆபுத்திரன், மணிமேகலை போன்ற காவிய நாயகர்கள் இங்குவந்து வழிபாடு இயற்றியதாக நூல்கள் கூறுகின்றன. இரண்டு நாக அரசர்களுக்குள் ஏற்பட்ட ஒரு பிணக்கைத் தீர்ப்பதற்காக இலங்கைவந்த கெளதம புத்தர் இத்தீவிற்கு வந்ததாகவும் இலர் கூறுவர்.

அலைகடல் நடுவில் வீற்றிருந்து அருள் ஒளிபரப்பும் அன்னையின் மகா உற்சவங்கள் ஆனி மாதத்தில் நடைபெறுகின்றன. பதினைந்தாம் நாள் பூரணை அன்று தீர்த்த உற்சவத்துடன் விழாக்கள் நிறைவுபெறும் பதினாறும் நாம் ஆழியிலே அன்னை தெற்பத்தில் வீற்றிருக்கும் காட்சி அலங்காரமானது

கடல் தாண்டித் துறையில் இறங்கும் அடியவர்க்கு முதலிற் கண்களிற்படுவது அம்பிகையின் மூலஸ்தானத்தின் ஒளியே. ஒளியாற் கவரப்பட்ட நாம் பசித்த கன்று தாய்ப்பசுவை நாடிச் செல்வதுபோல் ஆலயத்தை நாடிச் செல்கிறோம். பசி, பயணக் களைப்புக்கள் எல்லாம் எம்மை விட்டு அகன்று விடுகின்றன. ஆலயத்தை அண்மிக்கின்ற போது அந்த ஒளியினூடே ஓங்கார ரூபியாம் அன்னை நாகபூஷணியின் அருள் வடிவம் எம் கண்களுக்குப் படுகின்றது நெஞ்சக்சுன கல்லு நெகிழ்ந்துருக அவள் பதம் நடிச் செல்கின்ற அடியவரை அஞ்சேல் என அபயமளிக்கிறாள அம்பிகை களுமலக்கட்டுகள் விட்டு நீங்கி ஆன்மாவானது திருவருள் ஒளிமூலம் மெய்ப்பொருளுடன் கலக்கின்ற உண்மையை உணர்த்துவது இக்காட்சி

இங்கு நடைபெறுகின்ற தேர்த் திருவிழா மிகவும் சிறப்புடையது இரவு இரவாக வந்து குவிந்த பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் ஆலய வீதியிலே செழித்து வளர்ந்திருக்கும் வேப்ப விருட்சங்களின்கீழ் துயில் கொள்கின்றனர் அதிகாலையில் எழுந்து நீராடிக் கோபுரவாசலை அடைகின்றனர். அங்கே அம்பிகை தன் குமரர்கள் விநாயகர், சுப்பிரமணியர் சகிதம் தேர்ப்பவனிக்கென எழுந்தருளுகின்றாள். 'மெய்தான அரும்பி விதிர் விதிர்த்து அவள் பாதக் கமலங்களை ஒரு அரை நிமிட நேரம் எமது அகக்கண்களில் நிறுத்தித் தியானம் செய்கிறோம். ஒரு தெய்வீக அலை எமது உடலை ஊடறுத்துச் செல்வதுபோன்ற உணர்வு எமக்கு புல்லரித்து மயிர்கூச்செறிகின்றது. கண்கள் நீரைச் சுரக்கின்றன. சொற்பநேர அன்னையின் தியானத்தில் எமது உடலில் ஏற்படுகின்ற இந்த மாறுதல்கள் எம்மிற் கலந்திருக்கின்ற ஏதோ ஒரு சக்தியின் உந்துதலேயாம்

(5-ம் பக்கம் பார்க்க)

---

## புன்னலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர்

பல்லவி

ஆயக்கடவை தன்னில் அருள் சுரக்கும் ஐயனே
ஆறுதல் தந்தெமைக் காத்திடும் ஆனைமுகனே...

அனுபல்லவி

ஓயாப் பெரும்போரில் நாயாய் அலைகின்றோம்
மாயாப் பெருவாழ்வு தந்தெமைக் காததிடுமே...

சரணம்

தேவர் துயர்தீர்க்க நீள்மருப்பு ஒடித்தவனே
நாமும் துயர்போக்க நல்லருள் செய்பவனே
தீயாய்எரிக்கும் எங்கள் தீவினைகள் நீங்கிடவே
நீராய்ப் பெருக்கி நெஞ்சத்தில் உமைவைத்தோம்
வல்வினைகள்எம்மை வாட்டாமல் காக்கும் வல்லபனே
தொல்வினைகள் எல்லாம் தொலைக்கும் விநாயகனே
புன்னை நகரிருந்து புலங்காக்கும் புண்ணியனே
உன்னைச் சரணடைந்தோம் உத்தமனே

உயர்வழிப்பாய்

சி. பாலசுப்பிரமணியம்

(இன்று கொடியேற்றம்)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்






யாழ்ப்பாணத்தில் செயல்படவிருக்கும் தீயணைக்கும் படைக்கான சாதனங்கள் அடங்கிய வாகனம் இது.

# "கிராமப்புற பாடசாலைகள் முன்னேறி வருகின்றன"

(பண்டத்தரிப்பு)

''இன்று கிராமப்புற பாடசாலைகள் நகர்ப்புற பாடசாலைகள் என்ற வேறுபாடுகள் குறைந்து வருகின்றன. கிராமப்புற பாடசாலைகள் துரித முன்னேற்றம் அடைந்து வருவதால் மாணவர்கள் தங்கள் கிராமப் பகுதி பாடசாலைகளில் கற்று பெருமை தேடித் தர வேண்டும்''.

இவ்வாறு காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு தலைமைவகித்து பேசுகையில் வித்தியாலய அதிபரும் சங்கத் தலைவருமான திரு. செ. தேவதாசன் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

''பாடசாலையின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பெற்றோர், ஆசிரியர் தொடர்பும், ஒத்துழைப்பும் அவசியமானதாகும். பெற்றோர் பழைய மாணவர்கள் அடிக்கடி பாடசாலைக்கு வருகைதந்து மாணவர்களின் கல்வி நிலைபற்றியும் பாடசாலையின் அபிவிருத்தி பற்றியும் அறிந்து கொள்ளவேண்டும்.''

''எமது பாடசாலையில் பெற்றோர், பழைய மாணவர் முயற்சியினால் சுற்றுமதில் ஒன்று சுமார் 30 ஆயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டு வருகின்றது. இந்த வேலைகளை கல்வித்திணைக்கள அதிகாரிகளும் பாராட்டியுள்ளார்கள்.''

சங்க புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு செ தேவதாசன், உபதலைவர்: திரு. ம. தம்பிராசா, செயலாளர்: திரு ச. உருத்திரசிங்கம், பொருளாளர்: திரு. ஆ, பலராமன் நிர்வாகசபை உறுப்பினர்களாக 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

HOME FINANCE LTD.
ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
யாழ்ப்பாணம்
பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக
சீத்தை – பப்ளின் – பிசாமா
போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகாய விலை; விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவு செய்யவும்.
NO: 82, KANNATHIDDY ROAD, JAFFNA

பத்திரிகைத்துறை
பயிலுநர்கள் தேவை
யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பிரபல தமிழ்ப் பத்திரிகையொன்றின் ஆசிரிய பீடத்தில் பயிலுநர்களாகப் பணியாற்றுவதற்கு ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் நன்கு தேர்ச்சியுள்ள, பத்திரிகைத் துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
கல்வித்தகுதி மற்றும் நற்சான்றுகளுடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல: 3809,
C/O. 'ஈழநாடு'
தபாற்பெட்டி இல: 49 — யாழ்ப்பாணம்.
(3809)

விசேட அனுமதியுடன் 40
வணிகமாணி மாணவர்கள்
பல்கலைக்கழக வெளிநிலைப்
பயிற்சிக்கு பதிவுசெய்தல்
22-06-1985 சனிக்கிழமை 148/1 ஸ்ரான்லி வீதியில் உள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு க. சிவஞானம் 40 மாணவர்களுக்கான விண்ணப்பத்திரங்களை விநியோகிப்பார் ஆகவே சம்பந்தப்பட்ட மாணவர்கள் தவறாது சமூகமளித்து விண்ணப்பத்தைப் பெற்று பூர்த்திசெய்து ஒப்படைக்கவும்.
உதவிப் பதிவாளர்
3971 பட்டப்படிப்புகள் கல்லூரி

## மணிவாசகர் குருபூஜை

[மாவிட்டபுரம்]

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஆதரவில் மாணிக்கவாசகர் குருபூஜைவிழா நாளை பிற்பகல் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

கலைப்பேரரசு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ''திருவாசகம் எனும்தேன்'' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு ச விநாயகமூர்த்தி உரை நிகழ்த்துவார்.

## ஒருமண்டல ராமநாமபஜனை

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் 48 தினங்களாக திவ்வியப் பிரபந்த பாசுரம் ஓதுதலும் ஸ்ரீ ராம நாம பஜனையும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டி நடைபெறும் இப்பஜனை கடந்த 31ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது

## 21 வாரங்களுக்கு பஜன்சாதனை

(யாழ்ப்பாணம்)

மனிப்பாய் ஸ்ரீ சத்தியசாயி சேவா மண்டலியினர் நாட்டில் அமைதி நிலவவேண்டியும், பகவானின் 60 வது பிறந்ததினத்தை முன்னிட்டும் கடந்த 4 ஆம் திகதி முதல் 21 செவ்வாய் கிழமைகளுக்கு பஜன் சாதனை நடத்தி வருகின்றனர்.

## தொலைக்காட்சிப் பெட்டி கொள்ளை

(இருப்பிட்டி)

புங்குடுதீவு மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வு கூடத்தில் இருந்த தொலைகாட்சிபெட்டி இனந்தெரியாதவர்களினால் களவாடப் பட்டுள்ளது

இது விஞ்ஞானபீட மாணவர்களின் கல்விச் சேவைக்காக வழங்கப்பட்டது என்பது குறிபிடத்தக்கது.

## பயிற்சி

(வண்ணார்பண்ணை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தொண்டர்களுக்கான யோகாசனப் பயிற்சி வகுப்புகள் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்று வருகின்றன

மேமாதம் முதல் ஆரம்பிக்கப்பட்ட இப்பயிர்சிவகுப்புகள் புதன் கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்று வருகின்றன.

## வேண்டுவார்....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

இது நோய்களையும் தீர்க்க வல்லது, மனச் சஞ்லத்தைப போக்கி உள்ள அமைதியையும் சாந்தியையும் அளிக்கவல்லது இந்த உற்சவத்தன்று பல சந்தர்ப்பங்களில் நாகபூஷணி தன்னை வேண்டுதல்செயயும அடியவர்க்கு இந்த அனுபவத்தைக் கொடுத்து அவர்களை ஆட்கொள்கின்றாள்

தர்ம சிந்தையுள்ள பெரியவர்கள் ஆலய வீதிகளில் தாகசாந்தி நிலையங்களை அமைத்து அடியவர்களுக்கு தாகசாந்தி அளிக்கின்றனர் ஆபுத்திரனால் கோமுகிப்பொய்கையில் விடப்பட்ட குறையாது அன்னம் வழங்குகின்ற பாத்திரமாம் ''அமுதசுரபி'' யின் பெயரில் அன்னதானசபையினர் அமைந்திருக்கும் பிரமாண்டமான மண்டபத்தில் அம்பிகை அடியவர்கள் அனைவருக்கும் இல்லையென்றது அன்னம்வழங்கி அவர்களது பசிப்பிணி அகற்றுகின்றார்கள் அங்கே அம்பிகை அன்னபூரணியாக காட்சி கொடுக்கின்றாள்.

புளியங்கூடல் மாரியம்மன் ஆலயத்தில்

# மிருக காணிக்கை முற்றாகத் தடை!

## சைவ பரிபாலனசபை வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

புளியங்கூடல் மகா மாரியம்மன் ஆலயத்தில் கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்று வந்த மிருக காணிக்கையை இவ்வாண்டு ஆலய தர்மகர்த்தா முற்றாக தடை செய்துள்ளமையை யாழ்ப்பாணம்சைவ பரிபாலன சபை வரவேற்றுப் பாரட்டியுள்ளது.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் பொதுச் செயலாளர் த. சண்முகலிங்கம் அவர்கள் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் சபையின் மிக நீண்ட கால வேண்டுகோள் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மிருக காணிக்கை, மிருகபலி இரண்டும் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும் ஆண்டுதோறும் புளியங்கூடல் மகா மாரியம்மன் ஆலயத்துக்கு காணிக்கையாக கிடைக்கும் மிருகங்களை ஏலம் கூறுவதன் மூலம் சுமார் ஒரு லட்சம் ரூபா வரை வருமானமாகக் கிடைத்து வந்தது' தர்மகர்த்தா அவர்கள் இதனைக் கைவிட்டமைக்கு சைவ உலகு அவருக்கு ஆழ்ந்த நன்றியறிதலைக் தெரிவிககின்றது.

நாட்டில் உள்ள ஏனையசைவ ஆலங்களிலும் புளியங்கூடல் மகாமாரியம்மன் ஆலய தர்மகர்த்தாவின் முன்மாதிரியைப் பின்பற்றி பலியிடுதலை உடன் நிறுத்த முன்வரல் வேண்டும் என்று சைவ மக்களின் சார்பில் சைவ பரிபாலன சபை வேண்டுகிறது. என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# அனுராதபுரம் கோயில் அறங்காவலர்

சமீபகால சம்பவங்களால் அநியாயபுரமாக மாறியிருக்கும் அந்தப் பழந்தமிழ் ஊரில் நடந்து முடிந்தவையெல்லாம் ஈழத்தமிழர் வரலாற்றில் மறக்க முடியாதவை. நமது கண்ணுக்கு முன்பாக புதியதொரு அத்தியாயம் பிறக்கிறது.

இற்றைக்குச் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்புகூட நான்கு அங்கத்தவர்கள் கொண்ட அனுராதபுரம் நகரசபையில் தலைவர் உட்பட மூவர் தமிழர்களாகவே இருந்தார்கள் என்பது எத்தனை பேருக்குத் தெரியும் அங்கு எத்தனை பழந்தமிழ்க் குடும்பங்கள், அவற்றில் மயில்வாகனம் என்னும் மறத்தமிழருக்கு மகனாக உதித்தவர்தான் தமிழுக்கும் சைவத்துறக்கும் இறுதிவரை தொண்டு செய்து ஈற்றில் அந்த மண்ணிலேயே உயிர்நீத்த சட்டத்தரணி கணேசமூர்த்தி அவர்கள்.

அனுராதபுரம் வாழ் தமிழ், முஸ்லீம், சிங்கள மக்களின் நம்பிக்கைக்கும் அபிமானத்துக்கும் பாத்திரமான சட்டத்தரணி - நொத்தாரிஸ், சமாதான நீதிபதியாக மட்டும் அவர் இருக்கவில்லை சின்னஞ்சிறு வயதிலிருந்தே தமிழுக்கும் சைவத்துக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவராகவும் அவர் விளங்கினார் நல்ல காரியங்களுக்கு வாரிவழங்கும் வள்ளலாகவும், இனமத வேறுபாடின்றி வறியோர்களுக்கும் நலிந்தோர்க்கும் இலவச சேவை செய்யும் ஏழைப்பங்காளனாகவும் விளங்கியதை யாவரும் அறிவர்.

அனுராதபுரத்தில் தமிழுக்கும் சைவத்துக்கும் கேந்திர நிலையங்களாக விளங்கியவை அனுராதபுரம் விவேகானந்த மகாவித்தியாலயம், அருள்மிகு கதிரேசன் ஆலயம், அனுராதபுரம் விவேகானந்தசபை ஆகியன இவை மூன்றும் நெருங்கிய தொடர்புடையவையாயினும் வெவ்வேறுமுகாமைகளுக்குட்பட்டவை: திரு. கணேசமூர்த்தியின் வாழ்க்கை இறுதிவரை இந்த மூன்று நிறுவனங்களாலும் பின்னிப்பிணைந்ததாகவே இருந்தது கடைசிவரை அவரே கதிரேசன் ஆலய அறங்காவல் சபைக்கும், அனுராதபுரம் விவேகானந்த சபைக்கும் தலைவராக இருந்தார்.

மேற்படிப்புக்காக சிலகாலம் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் தங்கவேண்டி நேரிட்டபோதும் தனது இல்வாழ்வுக்கும் தொழிலுக்கும், பொதுச்சேவைக்கும அனுராதபுரத்தையே உரிய இடமாகத் தெரிந்தெடுத்துக் கொண்டார். அவர் இல்லாமல் தமிழ், சைவ நிகழ்ச்சிகள் நடைபெறுவது அபூர்வம். அவரும் ஏனைய நண்பர்களும் மேற்கொண்ட முயற்சியினால் கதிரேசன் ஆலயம் புதுப்பொலிவுடன் திகழ்ந்தது.

1977-ம் ஆண்டு ஆவணிக் கலவரத்தில் பலமாகத் தாக்கப்பட்டபோதும் நிலைமை சீரடைந்தவுடன் கடைசி மூச்சுவரை அந்த மண்ணிலே இருப்பேன் என்ற வைராக்கியத்துடன் மீண்டும் குடும்பத்துடன் அங்கேயே சென்றுவிட்டார். இதற்கு முக்கிய காரணம் அங்குள்ள இனிய நண்பர்களையும் மேற்கூறிய மூன்று நிறுவனங்களையும் விட்டுப்பிரிய மனமில்லாமையே

இராணுவ முகாமுக்குத் தானும் குடும்பத்தினரும் சென்றிருந்தபோதும், அங்கு வந்து சேர்ந்திராத ஏனைய நண்பர்களையும் அவர்களது குடும்பங்களையும் பற்றியே அதிக கவலை கொண்டிருந்ததோடு தன் செல்வாக்கைப் பயன்படுத்தி அவர்களையும் அங்கு அழைப்பிக்க முயற்சிசெய்திருக்கிறார் இறுதியில் அவர்களுக்கு என்ன நடந்தது. என்று தெரியாமல் வேறு பாதுகாப்பிடத்துக்குப்போக மனமற்றவராக இருந்தபோதே குடும்பத்துடன் மே 17-ம் திகதியன்று சூட்டுக்கு இலக்காகித் தான் கொண்ட வைராக்கியத்தின் படி அனுராதபுர மண்ணிலே உயிர்நீத்தார். அவருடைய மனைவியாரும் இரு குழந்தைகளும் (ஒருவர் விடுமுறையில் யாழ்ப்பாணத்திலேயே இருந்தவர்) தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

சிறுவயது முதல் கணேசமூர்த்தியின் அபிமானத்துக்குரிய நெருங்கிய நண்பராக இருந்த கதிரேசன் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ நடராஜக் குருக்களும அவருடன் இச்சம்பவத்தில் உயிர்நீத்துள்ளார் ஆலயத்தின் பிரதான நிர்வாகியாக கணேசமூர்த்தி இருந்தபோதிலும் அங்கு நடைபெறும் சகல பூசைகள், விழாக்கள் மற்றும் அனுராதபுரம் விவேகானந்த சபையினரால் நடத்தப்படும் குருபூசைகள் ஆகியவை சிறப்புற ஒத்துழைப்பு நல்கியவர் ஐயா அவர்கள். அவர் அடக்கமே

[8ம் பக்கம் பார்க்க]

# 'மாணவர் மத்தியில் தெய்வீக சிந்தனையை வளர்க்க வேண்டும்'

### தங்கம்மா அப்பாக்குட்டி பேச்சு

(மாவிட்டபுரம்)

''மாணவர்கள் மத்தியில் தெய்வீக சிந்தனையை வளர்க்க வேண்டியது இன்றைய சூழ்நிலையில் அவசியமாகின்றது. தெய்வீக மனதில்தான் தெளிவு பிறக்கமுடியும் ஆகவே பெற்றோர், ஆசிரியர்கள், சமயப் பெரியார்கள் போன்றோர் இதுவிடயத்தில் கவனமெடுக்கவேண்டும்''.

இவ்வாறு வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற வழிபாட்டு நிலையத் திறப்பு விழா, பாராட்டு விழா ஆகியவற்றில் கலந்துபதிலுரை வழங்கிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறினர்.

சர்வதேச இளைஞர் ஆண்டினை முன்னிட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அமைத்து வழங்கிய வழிபாட்டு நிலையம் திறப்பு விழாவும், சைவமும், தமிழும் வளரப் பணிபுரியும். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு பாராட்டு விழாவும் வித்தியாலய மண்டபத்தில் ஒருங்கே கொண்டாடப்பட்டன.

அதிபர் திரு. மு. சிவராசா தலைமையில் நடந்த இவ்விழாவில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறியதாவது:-

''இன்றைய மாணவர்கள் கல்வியில் அக்கறையில்லாமலும், பெற்றோர்கள், பெரியார்கள், குருமார்கள் போன்றோரை மதிக்காமலும் மனம் போன போக்கில் செயல்படுவதைக் காண்கிறோம் இந்நிலையைப் போக்க மாணவர்கள் மத்தியில் தெய்வீக எண்ணங்களைப் புகுத்தவேண்டும் மாணவர்களைத் திருவருள் பக்கம் செலுத்த நாம் முனைய வேண்டும். வருங்காலத்தில் பண்புடைய சமுதாயம் உருவாக நாம் வழிசமைக்கவேண்டும்.

பாடசாலைகளும் இத்துறையில் பெரும்பங்கு வகிக்கவேண்டும். பாடசாலைகளில் சமயச் சூழல் பேணப்படுவதுடன் வழிபாட்டு வசதிகள், திருமுறைப் போதனைகள் என்பன இடம் பெறவேண்டும் அதன்மூலம் மாணவர்களது சிந்தனை நல்வழியில் ஈடுபட வழிபிறக்கும்'' என்றார்.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி பி. சச்சிதானந்தம், கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோர் செல்வி தங்கம்மாவின் பல்வேறு பணிகளையும் பாராட்டிப் பேசினர்கள்

பாராட்டுப் பத்திரமொன்றும் அன்னாருக்கு வாசித்து வழங்கப்பட்டது.

## "தொழிலாளி வர்க்கத்தின் தலைமை உருவாக வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''வர்க்கமில்லாத அரசியல் பேசுபவர்களும் வர்க்கமில்லாத சோஷலிசம் பேசுபவர்களும் மிருகக் காட்சிச்சாலையில் வைக்கப்படவேண்டியவர்கள்'' என மாமேதை லெனின் கூறிய கருத்தை நினைவுகூரவேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். மாக்ஸிசம் எது என்பதைத் தொழிலாள வர்க்கம் உணர்ந்து செயல்படு மிகவும் அவசியமாகிவிட்டது.''

இவ்வாறு லங்கா தொழிற் சங்க சம்மேளனத்தின் வட பிரதேச செயலாளரும், கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேச அமைப்பாளருமான திரு. எஸ். விஜயானந்தன் கூறினர்.

இலங்கை அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கத்திலபரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இரசாயனத் தொழிற்சாலை இளைப்பாற்று மண்டபத்தில் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. அவர் மேலும் பேசியதாவது:-

''தொழிலாள வாக்கத்தின் தலைமையை ஏற்று விவசாயிகள் முற்போக்கான புத்திஜீவிகள் ஒருங்கிணைந்த போராட்டத்தின் மூலம் சோஷ்யத் நாட்டில் சோஷலிசஅரசு உதயமாகியதென்பதைத் தெளிவுபடுத்துவது அவசியம். தொழிலாள வர்க்கம் தனது பலத்தை உணர்ந்து செயற்படவேண்டும்.''

திருவாளர்கள்: பொன் குமாரசாமி, எம். சூசைப்பிள்ளை, எஸ். சண்முகராச உட்படப் பலர் உரையாற்றினர். புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

## எம்மத்தியில் வாழ்கின்றார்



இறப்பு என்பது இன்றியமையாத ஒரு முடிவு என்றார் ஆங்கிலப் பெரும் கவிஞன் சேக்ஸ்பியர், (Death is a Necessary End).

ஆனால் இன்றியமையாத அந்த முடிவைக் கடந்தும் சில பேர் வாழவே செய்கின்றார்கள் ''பார் மீது நான் சாகாதிருப்பேன் கண்டீர்'' என்று உரத்த குரலில் கூறியவர் பாரதி.

சிவில் என்ஜினியர் தேவராஜன் மண்ணுக்குள் மறைந்து மாதம் இருபத்தி நான்கு ஆகிவிட்டது.

அவர் பழகிய பாங்கினால் நல்கிய கொடையினால் நவின்ற நற்சொற்களால், படைத்த சாதனையினால், தெரிந்தவர்கள் மத்தியில் இன்றும் இளம் துடிப்போடு, சதையும் இரத்தமுமாக உலவுகின்றார்.

ஆண்டுகள் பல செல்லலாம் மாண்டவர் தொகை பெருகலாம். ஆனால் தேவராஜனின் நினைவு தெரிந்தவர்கள் மத்தியில் பசும் சுனையாக ஊற்றெடுத்துக்கொண்டேயிருக்கும்.

- ஆரோக்கியநாதர்

## பிரஜைகள் குழு

(மாவிட்டபுரம்)

வலி-வடக்கிலுள்ள 16கிராம சேவையாளர் பிரிவுகளிலும் பிரஜைகள் குழுக்கள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படவிருக்கின்றன.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடந்த பிரஜைகள் குழு அமைப்புச் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்தில் யாழ். பிரஜைகள் குழுச்செயலாளர் திரு.பாலசுப்பிரமணியம் கலந்துகொண்டார்.

கிராம சேவையாளர் மட்டத்தில் மக்களின் கஷ்டங்களைப்பற்றி விபரம் சேகரித்து அவர்களுக்கு நிவாரணம் கிடைக்க வழிவகுக்கும் வகையில் கிராம மட்டத்தில் பிரஜைகள் குழுக்கள் அமைக்க வேண்டியுள்ளதாக திரு.பாலசுப்பிரமணியம் கூறினர்.

மேற்படி கூட்டத்தில் வலி-வடக்கில் தற்சமயம் இயங்கும் பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகளும் மற்றும் பொதுநல சேவா சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 8 (1985-6-22) சனி
திதி: சதுர்த்தி பிற்பகல் வரை
நட்சத்திரம்: ஆயிலியம் பின்இரவு வரை

மேடம்: தொழில்துறையில் முன்னேற்றம் தென்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். சிலருக்கு நன்மையான இடமாற்றமும் உண்டு.

இடபம்: பணம் பலவழிகளிலும் செலவாகும். அன்னியநபர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். பிரயாணத்தின்போது பொருள் நழுவக் கூடும்.

மிதுனம்: வாழ்க்கையில் புதிரான நிலைதென்படும். எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். சிநேகித வழியால் கவலைகள் தோன்றலாம்.

கடகம்: ஆத்திரப்படுவதால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரும். மேலிடத்து செல்வாக்குப் பாதிக்கப்படலாம்.

சிங்கம்: சுற்றுடலில் செல்வாக்கு வளரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்திலும் பிணைப்புகள் பலமடையும்.

கன்னி: எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம். சிலருக்கு கடன் தொல்லையும் அதிகரிக்கலாம் சகோதரவழி சஞ்சலமும் உண்டு.

துலாம்: அந்தஸ்தில் உயர்வு தென்படும். எதிர்பார்த்த பதவி உயர்வுக்கு இன்று முன்னோடி நடவடிக்கை எடுக்கப்படும்.

விருச்சிகம்: எண்ணியது எண்ணியபடி இன்று நடக்கும். உத்தியோகத்தர்களாயின் நிர்வாகத் திறமையில் முதலிடம் பெறுவர்.

தனுசு: பகைமூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள். சிறிய விடயத்திற்குக்கூட குறைகேட்க நேரிடும்.

மகரம்: எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும். இன்று களஸ்திரவழியால் பொருள் வரவும் உண்டு. பெரியோர்களின் மதிப்பும் கிடைக்கும்.

கும்பம்; எதிர்பாராத பணமுடை ஏற்படும். கடன் தொல்லைகளால் கஷ்டப்படுவீர்கள். தொழில்துறையில் தொல்லைகள் தோன்றிமறையும்.

மீனம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள்.

திருமலை
வே. ரவீந்திரன்

## புங்குடுதீவுக்குத் தண்ணீர்

(இறுப்பிட்டி)

புங்குடுதீவு பொது மக்களுக்கு கோடை காலங்களில் கிராம அபிவிருத்தி சபையினால் சாட்டியில் இருந்து குடிதண்ணீர் எடுத்து வழங்கப்பட்டது இம்முறை வழங்கப்படவில்லை தற்போது சிலரின் முயற்சியால் குடிதண்ணீர் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## புதியநிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் றோ. க. த. க. பாடசாலை அபிவிருத்திச்சங்க நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தலைவர்: திரு இ. குலசிங்கம் (அதிபர்), செயலாளர் திரு. க. பேரின்பநாயகம், உப-தலைவர்; திரு. ம. சில்வஸ்ரர், உப-செயலாளர்:- திரு. த. ஞானவெளிச்சம், பொருளாளர்: திரு. கா. இராஜகோபால்.

எட்டுப்பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.


மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு
''மேற்கு ஜேர்மனி 'BASF''
தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 18/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2 ஞானார்த்தபிரதிப மாவத்தை, த.பெ.இல.0
(முன்னாள் மருதானைறோட்) கொழும்பு - 8
தொலைபேசி: 597965—9

கே. ஜீ. இன்ஸ்ரிரியூட்,
(இலங்கை வங்கி முன்பாக)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

I. C. M. A. Section A & B
I. A. B. - I. A. A.
Chartered (Pre'time)

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன
(3944)

வணிகமாணி பதிவு
ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில்
வணிகமாணி பட்டத்திற்கு
பதிவு செய்யத் தவறிய மாணவர்கள்
உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
செயலாளர்
இலங்கை பல்கலைக்கழக
வெளிநிலை மாணவர் மன்றம்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
3945

"ஸ்டொப்" கிளட்ச் & பிறேக் புளூயிட்
மலிவான விலைக்கு
போதியளவு
பெற்றுக்கொள்ளலாம்

STOP
Hydraulic
BRAKE
& CLUTCH
FLUID

விநியோகஸ்தர்கள்:-
டீமோ இன்டஸ்றீஸ்
லிமிடெட்
65, ஜேதவன வீதி,
கொழும்பு - 14.
தொலைபேசி: 23702-4, 34751




CHEMANEX
தயாரிப்பு:
கெமனெக்ஸ் லிமிட்டெட்

450 மிலி - ரூ. 27/25
250 மிலி - ரூ. 15/45

## வெலிங்டன்

10-30 — 2-15 — 4-15
THE HANDS OF THE NIGHT"
(Adults only)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## லிடோ சினிமா

10-30 — 2-30
பாண்டியன் — ரேவதி நடித்த
'புதுமைப் பெண்'
(ஈஸ்ட்மன் கலர்)

## வின்ஸர்

தினசரி 10-30, 2-00, 4-15
**Flying Killers**
நீரின் மேல் ஆபத்து! மாமிசம் உண்ண விரும்பும் பிராணிகளை யாரால் தடுக்க முடியும் விந்தை, விறுவிறுப்பு, திகில் நிறைந்த சித்திரம்.
(Adults only)

## பவித்ரா மினி

கஸ்தூரியார் வீதி
(யாழ் இந்துக் கல்லூரியடி)
4' திரைவானில்
"SUMMER IN HEAT"
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## மொடேர்ண்

மினி சினிமா
[ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை]
19 - 06 - 85 தொடக்கம்
**Karate Master**
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.

## ஸ்ரான்லி மினி 'A'

10-30, 12-30, 2-15, 4-15
THE GUESTAPO'S LAST LADY
ஆங்கிலப்படப் பிரியர்கட்கு நல்லதோர் விருந்து

## ஸ்ரான்லி மினி 'B'

10-30, 12-30, 2-15, 4-15
**ESCORT GIRLS**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## நியூசாந்தி (மினி)

(சாந்தி சினிமா)
10-30, 2-30
எம். ஜி. ஆர்.
மாதுரிதேவி
நம்பியார், லலிதா, பத்மினி
கலைஞர் கருணாநிதியின்
**மந்திரிகுமாரி**
(புதிய பிரதி)
வாள் சண்டைகளும் குதிரை ஓட்டங்களும் நிறைந்த படம்.

## ராஜா தியேட்டர்

யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
**சலங்கை ஒலி**
கடைசிவாரம்

## S. T. L. மினிசினிமா

(திருநெல்வேலி)
காலை: 9-00மணி
10-30, 12-30.
**Emmanuel Kiss Me**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்
பி.ப. 2-30, 4-30.
**LINDA**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

## லதா மினி

(கோண்டாவில்)
மோகன், லக்ஷ்மி, ரேவதி
**உதய கீதம்**

புத்தம் புதிய வெளியீடு
22-6-85 தொடக்கம்

## தேவிமினி

சினிமா
(வின்ஸர் அருகாமை)
பிரபு, பூர்ணிமா ஜெயராம் நடித்த
**உங்க வீட்டுப்பிள்ளை**
கலர்

## குமரன் மினி

சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30, 4-30.
**Guest Apo's Last Lady**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்
AM. 9-00. 12-30.
**LINDA**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

## எமது புதிய வெளியீடுகள்

"மாயமோகினி" (V.G.P. Orginal)
"நாணல்" " "
"யார் நீ?" " "

**குணம் வீடியோ சென்டர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23618
3963

## 7-வது வருட நினைவஞ்சலி

**பெஞ்சமின் பாலேந்திரன் வர்ணகுலசிங்கி**

இறைவனடி: 22-6-1978

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட என அன்பு மகன் பாலா!

நீர் எங்களை விட்டுப் பிரிந்து 7 ஆண்டுகாலம் ஆனாலும் உன் திரு உருவம் எங்கள் நெஞ்சை விட்டு என்றும் அகலாது.

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்:
உம் தாய், சகோதரிகள், சகோதரன், அத்தான்மார், அண்ணி, மச்சான், மருமக்கள்.

வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 3880

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**ஆறுமுகம் கணபதிப்பிள்ளை**

மலர்வு: 19-05-1910 அமரத்துவம்: 23-05-1985

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் அறிவின் சுடராய் வாழ்வின் வழிகாட்டியாய் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளிவீசிய தந்தையே! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தாலும் உங்கள் நினைவு எங்களை விட்டுப் பிரியாது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர் சின்னத்தம்பி, குடும்பஉறவினர்கள்.

18/8, கொண்டலடி லேன்,
நல்லூர். 3972

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி பராசக்தி [தேவி] இராசரெத்தினம்**

அன்புக் கணவர், அருமை மகள்.

அன்னை இல்லம், வசாவிளான். 3900

## எமது இளைய புதிய வெளியீடு



காதல் இளவரசன் கமலஹாசன்
முந்தானை முடிச்சு ஊர்வசி
சிறந்த கதையமைப்பு உள்ள
**அந்த ஒரு நிமிடம்**
(PYRAMID)

**வீடியோ பிரசாத்**
49, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

நெடுந்தீவு
**திருமதி இலட்சுமி அகத்தம்மா சின்னப்புநாயகம்**



உதயம்: 30 05 1912
மறைவு: 25 06 1983

அம்மா;
நீ மண்ணிற் கலந்து வருடம் இரண்டு,
வானிற் கலந்த வாழ்வுக்கு வயதேது?
தஞ்சினாய் ஆனாலும் வாழ்கின்றாய்
நாமும் மாயமாய் வாழ்கிறோம்— சாவு இழுக்கிறது
அதனால் நாம் சாகா வாழ்வு பெற
வானோர் உதவவேண்டுமே; அந்த
உறவு உன்னாலும் வானோராலும்
ஆண்டவன் கிறிஸ்துவுக்குள் ஆகவேண்டும்.

இந் நோக்கத்தில் நாம் நினைவு கூருகிறோம்.

அன்பு நாயகன், அருமை மக்கள்: மரியசேகரம்பிள்ளை (டுபாய்), சௌந்தரநாயகம் (ஆசிரியர்), செல்வநாயகம் (டுபாய்), புஷ்பராணி, ராஜேஸ்வரி, கமலராணி, விமலராணி, மருகர், பேரர், சுற்றம், சூழல்.

அனைவரும் 25-06-1985 காலை 6-15 திருப்பலியிலும் பகிர்தலிலும் பங்குபற்றுக.

36, சந்தனமாதா கோவில் வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்
3960

# மூடப்பட்டுள்ள தபால் அலுவலகங்கள் திறக்கப்படும்!

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் பாதுகாப்புக் கருதி மூடப்பட்டிருந்த சகல தபால் அலுவலகங்களும் பொதுமக்களின் நன்மைகருதி திறக்கப்படவுள்ளன.

மூடப்பட்டிருக்கும் தபால் அலுவலகங்கள் அடுத்தவாரம் திறக்கப்பட்டு இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க பின்பக்கம் திறக்கப்பட்டு இயங்கி வரும் யாழ். தலைமை தபால் அலுவலகம் மீண்டும் முன்பக்கமாகத் திறக்கப்பட்டு செயல்படவுள்ளது.

மேலும் தலைமைத் தபால் அலுவலகத்திலும், மற்றும் தபால் அலுவலகங்களிலும் முன்னர் இருந்ததுபோல பெறுமதியான முத்திரைகள் விற்பனவு, பணக் கொடுக்கல்வாங்கல் போன்றவை நடைமுறைப் படுத்தப்படுவது பற்றியும் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## அவசரகால நிலைமை நீடிப்பு

[கொழும்பு]

பாராளுமன்றத்தில் நேற்று அவசரகால நிலையை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது. இதற்கு ஆதரவாக 121 உறுப்பினர்கள் வாக்களித்தனர், கலவான எம்.பி. திரு சரத்முத்தேட்டுவகம எதிர்த்து வாக்களித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி என்பன வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. [து]

## புளியங்கூடல் மகாமாரி தேர்

[வண்ணார்பண்ணை]

தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களில் ஒன்றான புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று வழமை போல் நடைபெறுகின்றது.

பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வருகைதரும் இவ் உற்சவத்திற்கான வழமையான வசதிகள் இம்முறையும் செய்யப்பட்டுள்ளன.

இத் தேர்த்திருவிழாவிற்கு வரும் பக்தர்களின் போக்குவரத்து வசதிகருதி தீவுப்பகுதியின் சகல பாதைகளிலும் சேவையில் ஈடுபடும் வாகனங்கள் இவ்வாலயம் ஊடாகச் செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## த. ப. பொ. உ. வி...

[ம் பக்கத் தொடர்ச்சி]

சென்ற நான்கு இனந்தெரியாத நபர்கள் 6,000 ரூபா பணத்தையும் தட்டச்சு இயந்திரம் ஒன்றையும் கொள்ளையிட்டுச்சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் காசாளரும் கணக்காளரும் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

## மரண அறிவித்தல்
### கதிரவேற்பிள்ளை நாராயணசாமி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மகிழமரத்தடி கதிரவேற்பிள்ளை நாராயணசாமி காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-6-85 சனிக்கிழமை காலை 10 மணிக்கு தொண்டமனாறு காட்டுப்புல மயானத்தில் நடைபெறும்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்.

[3977]

## மரண அறிவித்தல்
### செல்வி அன்னரத்தினம் உவில்லியம்

செல்வி அன்னரத்தினம் உவில்லியம் காலமாகிவிட்டார். இவர் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற உவில்லியம் தம்பதிகளின் மகளும், பூரணம், செல்வராசா, ஞானசோதி, செல்வராணி, சாந்தி ஆகியோரின் சகோதரியும், திரு சபாபதிப்பிள்ளையின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பிரேத அடக்க ஆராதனை 23-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு அச்சுவேலியில் நடைபெறும். (3978)

## மரண அறிவித்தல்
### வேதாரணியம் கந்தையா

சிறுப்பிட்டி மத்தியைச் சேர்ந்தவரும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியருமான வேதாரணியம் கந்தையா காலமானார். இவர் ஆச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கிருஷ்ணராசா (பிரதேச பல்வைத்திய நிபுணர், யாழ்ப்பாணம்), ஓய்வு பெற்ற ஆசிரியை உமாதேவி, கனகராயன்குளம் மகாவித்தியாலய ஆசிரியை மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், நேத்திரலோசனி, மாணிக்கசோதி (ஆசிரியர், அ. மி. கல்லூரி, நீர்வேலி), இராஜகுலேந்திரன் (குவைத்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 22-06 85 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு குடும்ப மயானத்தில் நடைபெறும். நண்பர்கள், உறவினர்கள் தயவுடன் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். (3975)

## வடக்கில்,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதுவரைகாலமும் மாலை 7-00 மணிமுதல் அதிகாலை 4-00 மணி வரையும் அமுலிலிருந்த ஊரடங்குச் சட்டம், நேற்றுத் தொடக்கம் இரவு 8-00 மணியிலிருந்து அதிகாலை 4-00 மணி வரை அமுலில் இருக்கும்.

நிலைமை தொடர்ந்து சீராக இருந்தால் ஊரடங்குச் சட்டம் மேலும் தளர்த்தப்படும் என்றும், நாட்டின் அவசரகாலச் சட்டம்கூட விரைவில் தளர்த்தப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். [து]

## தமிழீழ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தது. இது நிலைமையைமேலும் மோசமாக்கும். நாட்டின் ஜனநாயகத்துக்கு பாதிப்பு ஏற்படமாட்டாது என்று மக்களுக்கு அரசு உறுதியளிக்க வேண்டும். இவற்றை அரசு செய்யாவிட்டால் தீவிரவாதிகளின் தாக்குதலை அரசினால் சமாளிக்க முடியாது.

அரசியல் கட்சிகள் கூட்டங்களை நடத்த அனுமதியுங்கள் ஜனதா விமுக்தி பெரமுன மீதுள்ள தடையையும், பத்திரிகைத் தணிக்கையையும் அரசு நீக்கவேண்டும். இது சகல பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு உதவும்.

அரசியல் அமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 6-வது திருத்தச் சட்ட மூலத்தினால் தமிழ் பிரதிநிதிகள் பராளுமன்றம் வரமுடியாமல் போயுள்ளது. அதனையும் அரசு நீக்க வேண்டும் அவசரகால நிலை என்ற போர்வையில் தற்போது நாட்டில் சொல்ல முடியாதவை எல்லாம் நடைபெறுகிறது.

ஆயுதக் கொள்வனவு தொடர்பாக தம்பிஜயா என்ற வர்த்தகர் கைது செய்யப்பட்டுள்ளார் இதுபற்றி அரசு உண்மை நிலையை வெளியிடவேண்டும். ஒக்லண்டில் ஹோட்டல் ஆரம்பிக்க பெருந் தொகையான பணம் தம்பிஜயாவின் சகோதரருக்கு வழங்கப்பட்டிருந்தது இதற்கு அரசு அங்கிகாரம் வழங்கியிருந்தது

யாழ் சிங்கள மகாவித்தியாலய அதிபரும் யாழ்ப்பாணத்தில் முன்பு வசித்த சிங்களவர் பலரும் என்னை நேற்று சந்தித்தனர் அவர்கள் அங்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ளார்கள் தமிழர்கள் மத்தியில் தாம் பாதுகாப்பாக வாழ முடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர் பலாலியிலிருந்து 88 பேர் கையொப்பம் இட்டு எனக்கு ஓர் கடிதம் அனுப்பியிருந்தனர். இதில் அங்கு வாழ்ந்த மக்களின் தோட்டங்களும், வேலிகளும் 'புல்டோசர்'ரால் இடிக்கப்பட்டதாக குறிப்பிடப் பட்டிருந்தது

இச்சமயத்தில் குறுக்கிட்ட தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் ''நீங்கள் தீவிரவாதிகளுக்காக பேசுகிறீர்கள் என்று கூறியபோது ''நான் எல்லா மக்களுக்காகவும் பேசுகிறேன் என்று சரத் குறிப்பிட்டார்.

அநுராதபுரச் சம்பவங்களுக்குப் பின்னர் இங்குள்ள பொலிசார் தமது கடமைகளை சரிவரச் செய்வதில்லை. இது பற்றி பொதுமக்கள் பொலிசாரிடம் கேட்டால் என்ன செய்வது புலிகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார்களாம்.

இனப்பிரச்னை சலுகைகளுடன் கூடிய தீர்வு வழங்கப்பட வேண்டும். இச்சலுகைகள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் இனப்பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் மக்கள் பலத்த ஆபத்தை எதிர்நோக்கவேண்டிவரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தமிழர்களை...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற ரஜீவ்—ஜே.ஆர். பேச்சுவார்த்தைகளின் பின்னர் இலங்கையில் இடம் பெற்ற இரு பெரிய சம்பவங்களை சுட்டிக்காட்டிப் பேசிய அமிர்தலிங்கம் இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் பாதுகாக்கவேண்டியது இலங்கை அரசின் கடமையாகும் என்றார்.

## பாராளுமன்றம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக்கட்சியினர் கோரிக்கை விடுத்தனர்.

இவர்களது கோரிக்கை ஏற்றுக் கொள்ளாததினால் எதிர்க் கட்சித்தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்காவும் சுதந்திரக்கட்சியினரும் வெளிநடப்பு செய்தனர் இவர்களைத் தொடர்ந்து தினேஸ்குணவர்த்தனவும் வெளிநடப்பு செய்தார்.

## கொழும்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து. பின்னர் கொழும்பு நோக்கிப் புறப்படும் என்றும் புகையிரத நிலைய உத்தியோகத்தர் தெரிவித்தார்.

தபால் ரயில் வண்டி அடுத்த வார ஆரம்பத்தில் சேவையில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பிரயாணிகளின் நன்மை கருதி புகையிரதப் பிரயாணச் சீட்டுக்கள் தரித்து நிற்கும் ரயில் நிலையங்களில் வைத்து விற்பனவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இன்ரசிற்றி ரயில் சேவை

எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் இன்ரசிற்றி ரயில் சேவை நடத்தப்படவுள்ளது இன்ரசிற்றி புதன்கிழமை அதிகாலை 5.45ற்குக் கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்டு நண்பகல் 12-20ற்கு காங்கேசன்துறையை வந்தடையும் எனவும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் இச்சேவை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## அனுராதபுர—

[5ம் பக்கத் தொடர்ச்சி]

உருவானவர். கணேசமூர்த்தியைப் போலவே அவரும் தமிழுக்கும் சைவத்துக்கும் தமது வாழ்வை அர்ப்பணித்தவர்.

ஐயா அவர்கள் இல்லாமல் எநதத் தமிழ்வீட்டிலும் எந்தச் சடங்கும் நடப்பது அரிதிலும் அரிது. அனுராதபுரத் தமிழ் மக்களின் உள்ளங்களில் தனி இடம் பெற்றவர் ஐயா அவரது வாழ்வெலாம் கதிரேசப் பெருமானின் காலடியிலேயே கிடக்கும் வைராக்கியத்துடன் வாழ்ந்தவர் ஐயா அவர்கள். அவரும் கணேசமூர்த்தியும் சுடப்பட்டபோது ஒருவருக்கொருவர் மிக அண்மையிலேயே வீழ்ந்து அனுராதபுர மண்ணிலே சிவபதம் அடைந்தார்கள்.

அனுராதபுரம் வருகின்ற தமிழ் அன்பர்களுக்கு எந்த நேரத்திலும் தங்க இடமும் அருந்த உணவும் அளிப்பதில் முன்னணியில் நின்றவர்கள் கணேசமூர்த்தியும், ஐயா அவர்களும். இவர்களைவிட அங்குள்ள எல்லாக் குடும்பங்களுமே விருந்தோம்பலில் சளையாதவர்கள்

இப்போது நடக்கும் அழிவுகள் எல்லாம் காலத்திற்குக் காலம் யுகமுடிவுகளில் நடைபெறும்ஆண்டவனுடைய ஊழிக்கூத்தின் ஒரு பகுதியே என மனம்தேறிஅமரர்களாகிவிட்ட கணேசமூர்த்தி அவர்களுக்கும் குருக்கள் ஐயா அவர்களுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மன அமைதி கிட்டப் பிரார்த்திப்போமாக

த. சகாதேவன்
செயலாளர்.
[அனுராதபுரம் விவேகானந்த சபை]

## கடலில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் மீன்பிடிக்கலாம்.

ஆயினும் பருத்தித்துறை இராணுவ முகாம், வல்வெட்டித்துறை இராணுவ முகாம், காரைநகர் கடற்படை முகாம்களுக்கு முன்னர் முன்னுள்ள கடலில் இவர்கள் மீன் பிடிக்க முடியாது.

இந்த 3 மைல் பரப்பில் மீன் பிடிப்பது தீவுப்பகுதிக்கு பொருந்தும்.

## பழைய விலையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விற்பனை நிலையத்தில் வழமையான கட்டுப்பாட்டு விலையில் நேற்று பெற்றோல் விற்பனை செய்யப்பட்டது.

இதனால் அதிகமான வாகனங்களைக் கியூ வரிசையில் காணமுடிந்தது.

ஒருவருக்குப் 10 லீற்றர் என்ற வகையில் பெற்றோல் வழங்கப்படுகிறது. இன்றும் இப்பெற்றோல் விற்பனை இடம் பெறும்.

பெற்றோல் பெறுபவர்கள் அமைதியாக நடந்து கொண்டால் தொடர்ந்து பெற்றோல் விநியோகம் இடம்பெறும் எனவும் கூறப்படுகிறது.

(வண். நிரு)

## இனப்பிரச்னை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கள் தெரிவித்தன.

ஆனால் திரும்பவும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான முறைகள் பற்றி ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

தமிழ் போராளிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே போர் நிறுத்தம் நீடிக்குமானால் எங்கு எப்போது பேச்சுவார்த்தை நடைபெறும் என்பது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்குத் தெரியாது என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசின் போக்கில் ஏதாவது குறிப்பிடத்தக்க மாற்றம்இருக்கின்றதா, அல்லது மாவட்ட சபை அமைக்கலாம் என்று ஏற்கனவே தெரிவித்து ஏற்றுக்கொள்ளப்படாத கொள்கையையே அரசு மீண்டும் எடுத்துக்கூறி இந்தப் பேச்சுவார்த்தையை பயனற்றதாகச் செய்துவிடுமா என்று அஞ்சப்படுவதாகவும் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

[து]

## ரஜீவுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் உடனடிப் பேச்சுக்கள் இடம் பெற்று தீர்வுகள் ஏற்பட வேண்டும் என்று ராஜதந்திரிகள் கருதுகின்றார்கள்.

போர் நிறுத்தம் ஏற்பட்டிருக்கும் இன்றையநிலையில் தமிழர்கள் பெரும்பான்மை வாழும் இடங்களில் அவர்களுக்கு வழங்கவிருக்கும் உத்தேச சுயாட்சி பற்றிய திட்டத்தையும் இலங்கை அரசு வெளியிட வேண்டும் என்றும் ராஜதந்திரிகள் கருதுகின்றார்கள்.

அண்மையில் புதுடில்லியில் நடைபெற்ற ரஜீவ்-ஜே. ஆர். பேச்சு வார்த்தையில் தமிழர்களுக்கு அவர்கள் பெரும்பான்மையாகவாழும்பகுதிகள் பரந்தளவு சுயாட்சி வழங்குவதாக ஜே. ஆர் கூறியிருந்தார், அதனை அவர் நிறைவேற்றுவதிலும் அவருக்குப் பல சிரமங்கள் உண்டு.

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காணும் வகையில் இலங்கையில் போர் நிறுத்த நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்த இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்வின் ராஜதந்திரத்தை வெளிநாட்டு ராஜதந்திரிகள் பலரும் வரவேற்றுள்ளதாக 'இந்து' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu Po Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126.